# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ      அதிவிசேஷமானது

අංක 1812/10 - 2013 මැයි 28 වැනි අඟහරුවාදා - 2013.05.28

***1812/10 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வலிகாமம் வடக்கு , வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில், காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை மத்தி, வீமன்காமம் தெற்கு, தையிட்டி தெற்கு, பலாலி தெற்கு, ஒட்டாபுலம், வளலாய் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2013.04.24 ஆந் திகதிய வைஏ/ரீஎல்எல்/2013/111 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 1 தொடக்கம் 72 வரை காட்டப்பட்ட சுமார் 2,578.4475 ஹெக்டயார்ஸ் (6,371 ஏக்கர், 01 றூட், 15 பேர்ச்சஸ்) முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித்துண்டு :

வடக்கு: இந்து சமுத்திரம் ; கிழக்கு: மண்ணினால் அமைக்கப்பட்ட அணைக்கரை ; தெற்கு : மண்ணினால் அமைக்கப்பட்ட அணைக்கரை; மேற்கு : இலங்கைத் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான காணி, சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி மற்றும் மண்ணினால் அமைக்கப்பட்ட அணைக்கரை.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/4/2013/டீ/96.
யாழ் மாவட்ட கா. எ. உத். குறிப்பு இல. : எல்டீட/டீஓ (I)/எல்ஏ/பீஏஎல்/01.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.05.16.

06 - 220


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.